

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு.தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், திருமதி. ருனு கோஷ் இ.ஆ.ப., திரு. பிஷ்னு பாதா சேத்தி இ.ஆ.ப., திரு. நாராயண சர்க்கார், இ.ஆ.ப., காவல்துறை தேர்தல் பார்வையாளர்திரு. அஜித்பட்டேல் இ.கா.ப., திரு. அனிருத் சரண்சிங் ஐ.ஆர்.எஸ்., திரு. பசவராஜ் ஹெர்மத் ஐ.ஆர்.எஸ்., திரு. திரு.பி.எஸ்.முன்டேரியா, ஐ.சி.எ.எஸ்., ஆகியோர்கள் நாகர்கோவில், கோணம் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தினை நேரில் சென்று பார்வையிட்டு, பாதுகாப்பு பணிகள் குறித்து இன்று (13.05.2016) ஆய்வு செய்தார்கள்.

செ.வெ.எண்: 282/2016 நாள்: 13.05.2016

**கன்னியாகுமரி மாவட்டம்**
**நாகர்கோவில், கோணம் அரசு தொழில்நுட்ப கல்லூரி**
**வாக்கு எண்ணும் மையத்தினை**
**மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான**
**திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தேர்தல் பார்வையாளர்கள் மற்றும் தேர்தல் செலவின பார்வையாளர்கள் நேரில் பார்வையிட்டு, இன்று (13.05.2016) ஆய்வு செய்தார்கள்.**

நடைபெறவுள்ள சட்டமன்ற பொதுத்தேர்தல் 2016-ல், கன்னியாகுமரி மாவட்டம், ஆறு சட்டமன்ற தொகுதியில் உள்ள 1688 வாக்குச்சாவடிகளில் பதிவான வாக்குகளை மே 19-ம் தேதி வாக்கு எண்ணும் மையமான நாகர்கோவில், கோணம் அரசு தொழில்நுட்ப கல்லூரியில் காலை 7 மணி முதல் வாக்கு எண்ணும் பணி நடைபெறவுள்ளது. இதனை முன்னிட்டு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. கு.தர்மராஜன் இ.கா.ப., அவர்கள் முன்னிலையில், திருமதி. ருனு கோஷ் இ.ஆ.ப., திரு. பிஷ்ணு பாதா சேத்தி இ.ஆ.ப., திரு. நாராயண சர்க்கார், இ.ஆ.ப., காவல்துறை தேர்தல் பார்வையாளர் திரு. அஜித்பட்டேல் இ.கா.ப., திரு. அனிருத் சரண்சிங் ஐ.ஆர்.எஸ்., திரு. பசவராஜ் ஹெர்மத் ஐ.ஆர்.எஸ்., திரு. திரு.பி.எஸ்.முன்டேரியா, ஐ.சி.எ.எஸ்., ஆகியோர்கள் நேரில் சென்று பாதுகாப்பு பணிகள், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம் வைக்கப்படும் இடம், மின்சார வசதி ஆகியவற்றை குறித்து இன்று (13.05.2016) ஆய்வு செய்தார்கள்.

இதில் கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதிக்கு திரு. ருனுகோஷ் இ.ஆ.ப., அவர்கள், நாகர்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு திரு. அனிருத் சரண்சிங் ஐ.ஆர்.எஸ்., அவர்கள், குளச்சல் சட்டமன்ற தொகுதிக்கு திரு. பிஷ்ணு பாதா சேத்தி இ.ஆ.ப., அவர்கள், பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதிக்கு திரு. பி.எஸ்.முன்டேரியா, ஐ.சி.எ.எஸ்., அவர்கள், விளவங்கோடு சட்டமன்ற தொகுதிக்கு திரு. நாராயண சர்க்கார், இ.ஆ.ப., அவர்கள், கிள்ளியூர் சட்டமன்ற தொகுதிக்கு திரு. பசவராஜ் ஹெர்மத் ஐ.ஆர்.எஸ்., ஆகியோர்கள் அந்தந்த சட்டமன்ற தொகுதிக்கு வாக்கு எண்ணும் மையத்தில் பொறுப்பு அலுவலர்களாக இருப்பார்கள்.

ஆய்வின் போது தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திருமதி. ஸ்ரேயா பி.சிங் இ.ஆ.ப., திரு. ச.மதியழகன், திருமதி. சின்னம்மாள், திரு. சிவதாஸ், திரு. சரவணன், திரு. காளிமுத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி. மீனாட்சி, பொதுப்பணி துறை செயற்பொறியாளர் பொறி. மணிசேகரன், உதவி செயற் பொறியாளர் பொறி. ரன்ஸ், உதவி பொறியாளர்கள் பொறி. டேனியல், பொறி. சத்யா, தேர்தல் தனி வட்டாட்சியர் திரு. சுப்பிரமணியன், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் திரு. எ.வி.மூர்த்தி, திரு. கோலப்பன், திருமதி. ஷீலா, திரு. குமாரதாஸ், தேர்தல் அலுவலர் (பயிற்சி) திரு. ரவி உள்ளிட்ட அரசு அலுவலர்கள், காவல்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அதனை தொடர்ந்து மாவட்ட ஆட்சித்தலைவரும் மாவட்ட தேர்தல் அலுவலருமான திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தேர்தல் விதிமுறைகளை பின்பற்றிய வாக்குப்பதிவு நாளான மே 16 அன்றும், வாக்கு எண்ணும் நாளான மே 19 அன்றும் பணிகள் மேற்கொள்ள அறிவுரைகளை தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்களுக்கு மாவட்ட ஆட்சியர் சிறு கூட்டரங்கில் இன்று வழங்கினார்.

---